**கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை:மரு:V.G.கற்பகவள்ளி, MD,(Bio)., (மு..கூ.பொ)**

**மு.மு.எண்:1046/நி1/2023.** நாள்: 01. **06.2023.**

பொருள் : நிர்வாகம் - நேரடி நியமனம் - இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் - மருத்துவத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர் தற்காலிக பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.2383/PSD-12/2020, நாள்:13.10.2021.

2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-06 அவர்களின் கடித ந.க.எண்.31495/நி2/2/2020, நாள்:03.11.2021.

3. இயக்குநர், மருத்துவக்கல்வி இயக்ககம், சென்னை-10, அவர்களின் கடித ந.க.எண்:38842/நி2/5/2020-5, நாள்:27.11.2021.

4. முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித.ந.க.எண்.653/நி/2021, நாள்:22.12.2021.

-------

**ஆணை:**

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசு பணிகள் தேர்வாணைய பெயர்பட்டியலின்படி பார்வை 2ல் காணும் சென்னை-06, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில் பணிநியமன ஆணை வழங்க விடுவித்து, பார்வை 3ல் காணும் சென்னை -10, மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கீழ்காணும் இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி நியமன அலுவலர் சம்பந்தப்பட்ட நிலையத்தலைவர் என்பதால், முதல்வர், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரிக்கு பணி நியமன ஆணை வழங்க ஒப்புதல் அளித்து பார்வை 4ல் காணும் கடிதத்தின்படி, கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு தமிழ்நாடு அரசு சார்நிலை பணிகள் விதி 10(a)(i) ன்படி நிரந்தர காலமுறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு 22.12.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருபவரது நிலையில், இவரது பணியினை கீழ்கண்டுள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் (ம) பதவி | பணி நியமனம் செய்யப்பட்ட ஆணை எண் (ம) நாள் | நிரந்தர காலமுறை ஊதியத்தில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.B.சாந்தசீலன், இளநிலை உதவியாளர் | முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி, கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.எண்:653/நி/2021, நாள்:22.12.2021 | 22.12.2021 முற்பகல் | 22.12.2021 முற்பகல் |

Scanned with OKEN Scanner

இவர் தமது தற்காலிகப் பணியை வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண்பருவகாலத்தில் வைக்கப்படுகிறார். தகுதிகாண்பருவக்காலத்தினை தமது முன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகளுக்குள் நிறைவு செய்திட வேண்டும் என ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தனது தகுதிகாண்பருவக் காலத்தில் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை விதித்தொகுப்பு, தமிழ்நாடு அரசு அலுவலர் பவானிசாகர் பயிற்சி முடிக்கப்பெற வேண்டுமென இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

உண்மை நகல் //ஆணைப்படி//அனுப்பப்படுகிறது

ஒம்/—மரு. V.G.கற்பகவள்ளி,MD(Bio)
முதல்வர்,(மு.கூ.பொ)

6/6/23

நிர்வாக அலுவலர்

6.6.23

**பெறுநர்,**

திரு.B.சாந்தசீலன், இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி, கள்ளகுறிச்சி - உரியவழியாக பணிப்பதிவேடு / அலுவலக நகல் / இருப்பு கோப்பு.

<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

1. இயக்குநர், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், சென்னை-10,
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-06.

Scanned with OKEN Scanner